தமிழாலயம் பேர்லின்
கல்வி, கலை, விளையாட்டு
Thamilalayam Berlin

Bildung, Kultur und Sport

**Schulleitung:**
Senthilkumaran Kandasamy
Charlottenburger Chaussee 117
13597 Berlin



பேர்லின், 28.08.2023

மதிப்பிற்குரிய பெற்றோர்களே,

உங்கள் மழலைகள் செந்நாவினில் செந்தமிழாகிய தமிழ் மொழி எந்நாளும் நடமிட இந்தப் புதிய கல்வியாண்டில் அவர்களை வரவேற்றுக்கொள்வதில் பெருமகிழ்வடைகிறோம்.

”இளமையிற் கல்வி சிலையில் எழுத்து”

”தலைமுறைகள் தாண்டியும் தமிழ் வளர்ப்போம் தரணியில்” என்ற சிறந்த சிந்தனைக்காக தன்னலமற்ற ஆசான்களின் சேவையினாலும், ஆலமரத்தின் விழுதுகளாய் தாங்கிநிற்கும் இனப்பற்றாளர்களின் ஆதரவினாலும், பெற்றோர்களின் பேராதரவினாலும் மேலும் ஒரு புதிய கல்வியாண்டில் தமிழ்க் கல்விக் கழகத்தின் அனுசரணையுடன் தடம்பதிக்கின்றது எமது பேர்லின் தமிழாலயம், விடுமுறை கழித்து எதிர்வரும் 02.09.2023 அன்று தமிழாலயம் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. அன்றுமுதல் நான்கு வயதிலிருந்து மாணவர்களை மழலையர் நிலையில் இணைத்துக்கொள்ளலாம். பிரதி சனிக்கிழமைகளில் 10:00 - 10:30 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 30.09.2023 அன்று மழலையர்களுக்கான கால்கோள் விழா (Einschulung) நடைபெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். மேலும் இந்த ஆண்டின் இறுதிவரை புதிதாக இணைந்துகொள்ளும் மழலையர் நிலை மாணவர்களுக்கு கட்டணம் அறவிடப் படமாட்டாது.

அழகு தமிழை ஆவலாய்ப் பயின்றிடவும், உலகில் தமிழால் ஒன்றிடவும், ஊக்கமுடன் உயர்வு பெற்றிடவும் தொடர்ந்து சேவையாற்றும் எமது தமிழாலயம்! கோடைகால விடுமுறையினை இனிதே கழித்து நலமுடனும், ஆர்வத்துடனும் புதிய கல்வியாண்டில் இணைந்து பயணிப்போம்.

தொடர்புகளுக்கு: 0177 4806180 செந்தில்
0157 37513558 தாரகா

நடைபெறும் முகவரி: St. Marien Schule,
Donau Str. 58,
12043 Berlin,
U-Bahnhof: Karl-Max Str.



„தமிழில் உரையாடுவோம் தமிழ் மொழி கற்றலை இலகுவாக்குவோம்“.

க.செந்தில்
……………………………
நிர்வாகி
கந்தசாமி செந்தில்குமரன்

ஜோ.தாரகா
……………………………
உதவி நிர்வாகி
தாரகா ஜோர்ஜ்

www.tbvgermany.com